
**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# திராவிட சினிமா


**36**

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

படங்கள் உதவி : ஞானம்







# ‘நல்லவன் வாழ்வான்’ – சட்டத்தின் வழி நீதி!

மிகுந்த கவனத்துடனே, ‘புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் நடிக்கும்’ (நானறிந்த வரையில் முதல்முறையாக டைட்டில் கார்டில்), எனக் காணப்பட்டது அண்ணாவின் **‘நல்லவன் வாழ்வான்’** திரைப்படத்தில்தான் எனக் குறிப்பிடுகிறேன்.


கதைக்களமும் திரைக்கதையும் வழக்கமான அண்ணாவின் திரைப்படங்களின் பாணியிலானது மட்டுமில்லை. கூடுதலாக, படத்தின் தொடக்கக் காட்சிகளில் வரும் மக்கள் மன்றங்களின் தேர்தல்கள் பற்றிய வசனங்களும் தகவல்களும் நூறு சதம் அண்ணாவினுடையதுதான். இதில் கவனத்துக்குரிய செய்தி, பேரறிஞர் அண்ணா, பாண்டுரங்கன் என்பவரது மூலக்கதைக்குத் திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறார் என்பது.

1961-ஆம் ஆண்டு வெளியான ‘நல்லவன் வாழ்வான்’, 1962-ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்கு முன்னர் வெளியான திரைப்படம். 1962-ஆம் ஆண்டு தேர்தல் களத்தை, கவனத்தில் கொண்டே இந்தத் திரைப்படத்தைத் திட்டமிட்டு எழுதியிருக்கிறார் அண்ணா என்பதில் ஐயமில்லை. வெகுகாலம் நேரடியாகப் படங்களில் செயல்படாத அண்ணா, 1961-இல் வெளியான இந்தப் படத்திலும், 1962-ஆம் ஆண்டில் வெளியான ‘எதையும் தாங்கும் இதயம்’ எனும் எஸ்.எஸ்.ராஜேந்திரன் நடித்த படத்திலும் என இரண்டு படங்களில் பணியாற்றியுள்ளார். அடுத்த வாரம் அந்தத் திரைப்படத்தைக் காணலாம்.

## தேர்தல் அரசியலும் சாமான்யர்களும்…

செய்யாத குற்றத்துக்கு, கொலைக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நாயகன், தூக்குக் கயிற்றின் விளிம்பிலிருந்து தப்புவதுதான் இந்தப் படத்தின் கதைக்களம். ஆனால், திரைப்படத்தின் ஆரம்பக் காட்சிகளில் நேரடியாக அன்றைய, 1962-ஆம் ஆண்டின் தேர்தல் அரசியல் நடவடிக்கைகள் பேசப்படுகின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுக் கால திராவிட அரசியல்தான், தேர்தல் அரசியலின் புனிதத்தைச் சீரழித்துவிட்டது என அங்கலாய்க்கும் காமாலைக் கண்ணர்கள் ஐயோ பாவம். அவர்கள் அசல் வரலாற்றை அறியாதவர்கள் அல்ல, அதனை ஒளித்துக் கொள்ள நினைப்பவர்கள். கூடுதலாக, அவர்கள் திராவிட இயக்கத்தவர்கள், குறிப்பாக சாமன்யர்களான திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்கொண்ட சவால்களையும்,



அவர்களுக்கு எதிராகத் திரண்ட உயர்ஜாதி மற்றும் பண முதலைகளையும் எதிர்கொண்ட விதத்தையும் அறியாதது போல நடிப்பவர்கள்.

தேர்தல் களத்தில் எளிய மனிதர்களின் பிரதிநிதி, நாயகன் முத்துவும், ஊரின் பெரும் தனவந்தர் நல்லசிவமும் போட்டியிடுகின்றனர். நல்லசிவம், ஏழை மாரியம்மன் கோயில் (அண்ணாவின் விருப்பத்துக்குரிய அம்மன் பெயர். அம்மன் ஏழையா அல்லது அவளை வழிபடுபவர்கள் ஏழையா என்பதே உள்ளீடான பகடி) தர்மகர்த்தாவும் கூட. ஆளும்கட்சியின் அரசுப் பிரதிநிதியாக ஊர்ப்பணத்தை மட்டுமல்ல, கோயில் சொத்தையும் களவாடும் பேர்வழி. இன்று தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத்துறை மீதான கட்டுப்பாட்டை நீக்கிவிடப் போராடுபவர்களின் மூதாதையர், நல்லசிவம் கதாபாத்திரம்.

தேர்தலில் வெற்றி பெற அம்மனுக்கு நூறு தேங்காய் ‘லஞ்சம்’ கொடுக்கும் நபர். நல்லசிவத்தின் தேர்தல் பிரச்சாரத்தின் முறை, ஊரில் பெரிய பண்ணையாரைப் பார்த்து, ‘ஜனங்கள எனக்கே ஓட்டுப் போட சொல்லுங்க’ என்பது. மாறாக, தி.மு.க.வினர், பம்பரமாகச் சுற்றி ஓட்டுக் கேட்பதாகப் பேசப்படுகிறது. வேகமாக சுற்றும் பம்பரம் கடைசியில் ஓய்ந்து தலை சாய்ந்துவிடுமென ஆறுதல் ஆருடம் சொல்கிறார் ‘எடுபிடி / கை பானம்’ ஐயர்.

## சத்தியமும் ஓட்டுக்குப் பணமும்

பெரும்பாலும் தி.மு.க திரைப்படங்களில் தவிர்க்கப்பட்டு, ‘பூசாரி’ என்ற அடையாளத்துடன் வரும் பார்ப்பனர் இந்தத் திரைப்படத்தில் நேரடியான அவதாரத்திலேயே வருகிறார். அவருக்கான அண்ணாவின் வசனங்கள் ஒரு தனியான ஆய்வுப் பொருள். அவை தன்னியல்பாக வந்து விழுபவையாக மட்டுமில்லை, அவற்றிற்கு வரலாற்றுப் புலம், செய்திகள் ஆகியவை உள்ளீடாகப் பொதிந்திருக்கும். அதிலும் எம்.ஆர்.ராதா போன்ற மாபெரும் நடிக ஆளுமையின் இணைவில் அது புதிய உச்சங்களைத் தொடும்.

நல்லசிவம், ‘பிச்சைக்காரப் பயல்களுக்குத் திமிர பாத்தியா?’ என்றால், ‘எல்லோருக்கும் ஓட்டுன்னுட்டாலோண்ணா’ என்பார் ஐயர். அனைவருக்கும் வாக்குரிமை எனும் கோட்பாடே, அண்ணாவை, பெரியாரின் தேர்தல் நிராகரிப்புப் பாதையிலிருந்து விலகும் துணிவையும் நம்பிக்கையையும் கொடுத்தது என்பதுதானே நமது வரலாறு. அதை எப்படி ஒற்றை வார்த்தையில் பொதிந்து விடுகிறார் அண்ணா. எனவேதான் தி.மு.க இளைஞன் முத்து அவர்களை, ‘அனுமதி அளிக்கும் எஜமானர்கள்’, **‘தேர்தல் வெற்றி மக்களுக்குச் சேவை செய்ய ஒரு வாய்ப்பு’** என்பான்.

முத்து, ‘ஏழைங்க கட்டளையை ஏற்றுத் தேர்தலில் நிற்கிறேன்’ என்றால், நல்லசிவம், ‘தங்கமான பையன எலக்சன்ல இழுத்து விட்டுட்டாங்க’ என்பார். நல்லசிவம் தேர்தலில் தோற்றதும், ‘கட்டுக் கட்டா பணம் கொடுத்தேனே வாங்கிக்கிட்டு ஏமாத்திட்டாங்க’ எனப் புலம்புவார். அது அண்ணாவின் மக்கள் மீதான அசையாத நம்பிக்கையின் அடையாளம். அது நிறைவேற 1967- ஆம் ஆண்டு தேர்தல் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், நிஜத்தில் பஸ் முதலாளி நடேச முதலியார், சாமி படத்தின் மீது சத்தியம் வாங்கிக் கொண்டு கொடுத்த ஐந்து ரூபாய், நமது பேரறிஞர் அண்ணாவை 1962-ஆம் ஆண்டின் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் தோல்வியுறச் செய்து அதிர்ச்சி அளித்தது.

## சட்டமும் நீதியும்

‘ஆரிய மாயை’ தொடங்கி, சுயமரியாதைத் திருமணச் சட்டம் அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் பெற்றது வரையான அண்ணாவின் அக்கறைகளில் முக்கியமான கவனம் பெறும் பகுதி, சட்டத்தின்படியான நீதி என்பதுதான். பார்ப்பனருடனான, பார்ப்பனரல்லாத இந்துப் பெண்ணின் திருமணம், மனுச்சட்டத்தின் அடிப்படையில் மறுக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புதான், சுயமரியாதைத் திருமணம் தனித்த வகைமையாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற அண்ணாவின் சட்டப் போராட்டத்துக்கு விதையாக அமைந்தது.

அண்ணாவின் திரைப்படங்களிலும் சட்ட விதிகள் குறித்த விமர்சனங்கள், தீர்ப்புகளின் மூடநம்பிக்கைவாதம் போன்றவையே இடம்பெறும். குறிப்பாக, அண்ணாவின் கொள்கை, ‘சட்டம் என்பது இருட்டறை அதில் ஒரு வழக்கறிஞரின் வாதம் கைவிளக்கு போன்றது. அது எளியவர்களுக்குக் கிடைப்பது அரிது’ என்பதே. இங்கேயும் நல்லசிவம் செய்த கொலை முத்து மீது விழுகிறது. பணமுதலையின் பிடியிலிருந்து இரண்டு பெண்களை மீட்டதற்குப் பலனாகத் தூக்குக் கயிறு.

அந்தப் பொய்க் குற்றச்சாட்டினை முறியடிக்க, சிறையிலிருந்து தப்பி, அடிகளார் வேடமிட்டு, நல்லசிவத்தின் பிடியிலிருக்கும் ஒரே சாட்சியான பாட்டியை மீட்க முயல்கிறான் முத்து. இந்த முயற்சி தோல்வியுற்றாலும், இன்னொரு சட்டரீதியான ஜோடிப்புக் காட்சி மூலம் நல்லசிவத்தைத் தன் வாயாலேயே தன் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்கிறான். நல்லசிவத்தின் வாக்குமூலம் ‘மறைந்திருக்கும் மேஜிஸ்ட்ரேட்டால்’ பதிவு செய்யப்பட்டு ஆவணமாகிறது. இந்தச் சட்டப்பூர்வமான ஆவணமாக்கல் பகுதிதான் அண்ணாவின் முனைப்பு. விடுதலை முறையான ஆவணத்தின் அடிப்படையில்.

ப.நீலகண்டன் இயக்கத்தில், டி.ஆர்.பாப்பா இசையில் பாடல்களில் உதயசூரியன் உதித்தபடி இருக்கிறது. நம்பியார், ராஜசுலோசனா, ஈ.வி.சரோஜா ஆகியோரும் நடித்திருந்தனர்.

...படம் விரியும்

## ‘எச்சரிக்கை: அது தேர்தல் பணியாகவும் இருக்கலாம்’

நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக் குளறுபடிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மோசமான நிர்வாகத்துக்கு மற்றுமொரு உதாரணமாகியுள்ளது. இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பலரும் பதிவிட்டு வரும் நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு எழுதியுள்ள பதிவு கவனிக்க வைக்கிறது. எச்சரிக்கை என்கிற ஹேஸ்டேக்குடன்,

2019 -ஆம் ஆண்டு தேர்தல் வருவதற்கு முன்பு 2018 -ஆம் ஆண்டு சனவரி தொடக்கத்தின் போதே பிரதமர் மோடியை கொலை செய்ய ‘அர்பன் நக்ஸல்கள்’ முயற்சித்தார்கள் எனப் பலர் கைது செய்யப்பட்டனர். வழக்கறிஞர் ரோனா வில்சன் அவர்களுடைய கம்ப்யூட்டரில் கொலை முயற்சிக்கான கடிதம் வந்ததாகச் சொல்லி,ரோனா வில்சன் ஊபா சட்டத்தில் கைது செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து பீமாகோரேகான் வழக்கு எனச் சொல்லப்படுகிற வகையில், இதுவரை 16 சமூகச் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர். (அருட்தந்தை ஸ்டேன் சாமி இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்) இதுவரை குற்றப்பத்திரிகை கூடத் தாக்கல் செய்ய முடியவில்லை.

2019-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. தலைவர்கள், “மோடியைக் கொலை செய்ய முயற்சிக்கிறது; இந்தியாவுக்கே இது ஆபத்து” எனப் பரப்புரை செய்து வெற்றி பெற்றது. இச்சூழலில் 2024-ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், நாடாளு மன்றத்துக்குள் பா.ஜ.கவின் அனுமதிச் சீட்டோடு புகைக்குண்டுகள் வீசியதாக இரு பெண்கள் பிடிபட்டுள்ளனர். தேர்தலுக்கான வேலையை பா.ஜ.க. ஆரம்பித்து விட்டது என்றே தோன்றுகிறது.

இந்தியாவின் பாதுகாப்பு, நாடாளு மன்றத்தின் பாதுகாப்பு குறித்தெல்லாம் பா.ஜ.க.வுக்கு அக்கறை கிடையாது. முழுக்க முழுக்க 2024 -ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்தான் இலக்கு”எனப் பதிவிட்டுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்



## பேராசிரியர் தந்த பட்டம்!



மாறன்

மதுரை முத்து அவர்கள் கைப்பட எழுதி பேரறிஞர் அண்ணா அவர்களது கரங்களால் நான் கழக உறுப்பினர் அட்டை பெற்றவன். இன்றைக்கு 91 வயதில் கழகம் இருக்கும் நிலையைக் கண்டு பெருமை அடைகிறேன். 1998-ஆம் ஆண்டுத் திருச்சி சங்கம் விடுதிக்கு ஒரு விழாவில் பங்கேற்க, பேராசிரியர் அவர்கள் வருகை தந்த போது, அன்றைக்குப் பகுதி அவைத் தலைவராக இருந்த எனக்கு ‘சுயமரி யாதை வீரர்’ என்று பட்டமளித்து வாழ்த்தினார். இன்று வரை என் இல்லத்தை அலங்கரிக்கும் புகைப்படமாக இப்படம் திகழ்கிறது..

**-வெ.மாறன்,**
**முன்னாள் தலைவர்,**
**மாவட்ட இலக்கிய அணி, திருச்சி**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.
வாட்ஸ்அப் எண்: 90033–24473
மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### மாநில சுயாட்சி மாநாடு

**1970-ஆம் ஆண்டு மாநில சுயாட்சி மாநாட்டை நடத்தியது கழகம். இந்த மாநாட்டில் தந்தை பெரியார் மற்றும் இயக்க முன்னோடிகள் பங்கேற்றனர். ‘கலைஞரின் மனசாட்சி’ எனப் போற்றப்படும் தலைவர் முரசொலி மாறன் அவர்களின் மாநில சுயாட்சி நூல் வெளியிடப்பட்டது. அந்த ஆண்டு, சூத்திரர் என்கிற இழிவை நீக்கும், கருவறை நுழைவுப் போராட்டத்தை அறிவித்தார் பெரியார். ஆனால், கலைஞரின் வேண்டுகோளுக்கு இணங்க அந்தக் கிளர்ச்சியை பெரியார் ஒத்தி வைத்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**329**




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131